(இ) இல்லையெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : இந்த நீர்த்தேக்கத்தால் எத்தனை கிராமங்களில் உள்ள எத்தனை ஏக்கர் நிலப்பரப்புகள் பயன்பெறுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

காவேரி ஆற்றின் குறுக்கே பாலம்

*65 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரி ஆற்றின் குறுக்கே குளித்தலைக்கும்—முசிறிக்கும் இடையில் பாலம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்; அத்தகைய செயற்குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : இந்தத் திட்டத்திற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு? எந்த ஆண்டில் இருந்து வேலை தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதற்கு 55 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மாநில ரீதியில் இவ்வேலையை எடுத்துக் கொள்ள இயலாது. இந்த வேலையைத் தொடங்குவது இந்திய அரசிடம் இருந்து இவ் வேலைக்குக் கிடைக்கும் உதவியைப் பொறுத்திருக்கிறது.

*Madras Zoo*

*66 *Q.*—Thiru K. VINAYAGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) Whether the animals in the Madras Zoo are ill-fed and ill kept ;

(*b*) Whether there is rubbish all over the place in the Zoo; and

(*c*) Whether the gate collections go to the Corporation authorities or to any contractor?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இல்லை; மிருகக் காட்சிசாலை ஊழியர்கள் அந்த இடத்தை நாள் தவறாமல் துப்புரவாக வைத்து வருகின்றனர்.

(இ) மிருகக் காட்சிசாலைப் பூங்காவைக் காண வருபவர் களிடம் நுழைவுக் கட்டணத்தையும், சைக்கிள் நிறுத்துமிடத்துக் கான கட்டணத்தையும் வசூலிக்கும் உரிமை ஆண்டுதோறும் ஒப்பந்தக் குத்தகைக்கு விடப்படுகிறது.

1969 பிப்ரவரி 25]

திரு. கே. விநாயகம்: இந்த மிருகக் காட்சி சாலை இப்போது இருக்கும் இடத்தில் இருப்பது சரியல்ல என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டு இதை ராஜ்பவன் தோட்டத்திற்குப் பக்கத்தில் நில ஆர்ஜிதம் செய்து அங்கு மாற்ற வேண்டுமென்ற யோசனை இருந்ததே, இப்போது அது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா இல்லையா? நான் ஒரு சிறுத்தைப் புலி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியை இரண்டாவது முறையாகப் போடுகிறீர்கள்.

திரு. கே. விநாயகம்: நான் கொடுத்த சிறுத்தைப் புலி என்று விளம்பர போர்டு போட்டிருந்ததை அகற்றி விட்டார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவ்வாறு அகற்றிய பலகையை திரும்பவும் புதிதாகப் போட சர்க்காருக்கு யோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்த மிருகக் காட்சி சாலையை மாற்றுவதற்கான திட்டம் இருப்பதாகத் தகவல் இல்லை. மாண்புமிகு அங்கத்தினர் கொடுத்த சிறுத்தைப் புலி பற்றி போர்டு இருந்ததை மாற்றி விட்டதாகச் சொல்லுகிறார்கள். பொதுவாக, பத்தாண்டு, பதினைந்தாண்டு ஆகிவிட்டால் அந்தந்தப் பொருள்கள் அவரவர்களுக்கே சொந்தம் என்ற அனுபவ பாத்தியதை இருந்து வருகிறது. இருப்பினும் உறுப்பினர் அவர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: மிருகங்கள் தங்களுக்கு ஆகாரம் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று காங்கிரஸ் கட்சி கொறடாவிடம் டெப்டேஷன் போனதாகத் தெரிகிறது. அதற்குத் தலைமை தாங்கிய மிருகம் எது என்று தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அது யானையாகத்தான் இருந்திருக்கும்.

திரு. கே. விநாயகம்: கார்ப்பரேஷன் நிர்வாக ரிப்போர்டில் இந்த மாதிரி போதிய அளவுக்கு மிருகங்களுக்கு உணவு கொடுக்கப்படுவதில்லை என்று கூறப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? குறிப்பாக ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அது பற்றிய தகவல் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: எம். ஜி. ஆர். கொடுத்த சிங்கமும், திரு. விநாயகம் கொடுத்த சிறுத்தையும் நேசமாக இருக்கின்றனவா அல்லது அங்கும் சண்டை போட்டுக் கொண்டுதான் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அது திரு. விநாயகம் கொடுத்த சிறுத்தைப் புலியின் குணத்தைப் பொருத்தது.

திரு. கே. போஜன் : சென்னை நகரத்தில் அமைத்திருக்கும் மிருகக் காட்சி சாலையைப் போல் நம் மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் தலைநகரங்களில் தொடங்குவதற்குத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை.

### ஏற்காட்டிலுள்ள நாகனூர்—டேனிஸ்பேட்டை சாலை

*67 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லா ஏற்காடு மலைப் பகுதியில் மலை வாசிகள் நலனுக்காக போடப்பட்ட நாகனூர்—டேனிஸ்பேட்டை ரோடு பூர்த்தியாய் விட்டதா?

(இ) இல்லையெனில் அதற்கான காரணம் என்ன?

(உ) எப்போது பூர்த்தி செய்யப்படும்?

(எ) அந்த ரோடுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) எல்லாவற்றிலும் வேண்டும் அளவிற்கேற்றபடி அது இன்னும் முடிக்கப்படவில்லை.

(இ) சாலை வேலைகளை நிறைவேற்றுவதில் நடந்ததாகக் கூறப் படுகிற முறைகேடான செயல்கள் குறித்து செய்யப்பட்ட சிறு குற்றச்சாட்டுகளை கண்காணிப்பு-லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை துப்புத் துலக்கி வருகிறது. அது முடிகிற வரையில் மேற்கொண்டு வேலை நிறைவேற்றப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

(உ) அதைச் சரிவர இப்போதே முன்கூட்டிக் கூற இயலாது.

(எ) குறிப்பிட்ட வேலைகளுக்காகவென்று குறிப்பாக எந்த நிதி ஒதுக்கமும் செய்யப்படுவதில்லை.

பி.ப. 10–00 திரு. எம். சுரேந்திரன் : இந்த ரோடு வேலையில் பல ஊழல்கள் நடந்து அங்கு சிறுசிறு கண்ட்ராக்டர்களாக வேலை செய்தவர்களுக்குப் பணம் வந்து சேரவில்லை என்று புகார் வந்திருக்கிறது. அந்த சிறு சிறு கண்ட்ராக்டர்களின் கஷ்டங்களை உணர்ந்து சீக்கிரம் அதைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தப் பிரச்சினைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள். அதன்படி அவர்கள் கேட்ட ரூ. 1,50,000 ஒரு முறை கொடுக்கப்பட்டு அது அவர்களுக்கு வினியோகிக்கப் பட்டது. மேற்கொண்டும் ரூ. 5,50,000 வேண்டுமென்று கேட்டு அதுவும் கொடுக்கப்பட்டது. ஆனால் அவைகளைக் கொடுப்பதற்கு இப்போது 'செக் மெஷர்மென்ட்' கணக்குகள் எல்லாம், லஞ்ச ஒழிப்புத் துறையால் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதால் அது முடிகிற வரையில் அதைக் கொடுக்கக் கூடாது என்று அந்தத் துறையிலிருந்து வந்த அறிவுரைப்படி கொடுக்காமல் நிறுத்தப் பட்டது. அது கிடைத்தவுடன் அது முறைப்படி வழங்கப்படும்.